# ஜனநாயக சூழலை உருவாக்க ஒன்றிணைவோம்!

அன்பான சகோதர; சகோதரிகளே,

இலங்கையில் தமிழ் மொழியைப் பேசும் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கென நியாயமான கோரிக்கை வரலாற்றில் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்தது அனைவரும் அறிந்ததே! இதன் காரணமாக ஏற்பட்ட சிவில் யுத்தம் இன்று முழு நாட்டையுமே ஓர் அவல நிலைக்கு தள்ளி விட்டுள்ளது. நாட்டின் ஒரு பகுதியை நோக்கி பாரிய யுத்த பிரகடனம் செய்யப்பட்டு அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் யுத்தத்தின் கைதிக ளாக மாற்றப்பட்டிருக்கின்றனர். இந்த அவலநிலையில் வாழ்ந்த நீங்கள் முகம் கொடுத்த சொல்லொண்ணாத் துன்பங்களுக்கு எவருமே பொறுப்பெடுக்க தயாராக இருக்கவில்லை. மாறி மாறித் துப்பாக்கி ஏந்தியவர்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டீர்கள். ஓர் ஜனநாயக சிவில் நிர்வாக சூழலையே மறந்துப் போன நிலைமையே கடந்த 15 வருடங்களாக இங்கு காணப்படுகிறது. இச்சூழல் உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

இன்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இப்பிரதேசத்தில் இராணுவ நிர்வாகமே நடைபெறுகிறது. இதனை சிவில் நிர்வாகமாக மாற்றுவது எப்படி? ஏனெனில், அவ்வாறு மாற்றாத விடத்து தொடர்ந்தும், நீங்கள் முகம் கொடுக்கும் அவலநிலையை அதிகாரத்தில் உள்ளவர்கள் நியாயப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். இப்பிரதேசத்தில் வாழும் உங்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். உணவு, ஏனைய பாவனைப் பொருட்களின் விலைகள், விநியோகம் சாதாரண நிலைக்கு கொண்டு வரப்படவேண்டும். உடைத்து அழிக்கப்பட்ட இருப் பிடங்கள் உடனடியாக புனர்நிர்மானம் செய்யப்படவேண்டும். மருத்துவ வசதிகள் உடனடியாக செய்து தரப்படவேண்டும். வயது வந்தோர்கள் தமது தொழிலை ஆரம்பிக்கவும் வேலைக்கு செல்லவும்; பிள்ளைகள் கல்வி கற்பதற்குமான சூழல், உடனடியாக உருவாக்கப்படவேண்டும். இப்பிரதே சத்தில் அன்றாடம் உங்களின் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் உறுதி செய்யப்பட வேண்டிய அதேவிடத்து அவ்வறான பிரச்சினைகள் ஏற்படுத்து மிடத்து அச்சமின்றி முறைப்பாடு செய்வதற்கான வழிவகைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். அகதிகளாகியுள்ள சகல மக்களும் (முஸ்லீம் மக்கள் உட்பட) தத்தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி வாழ்வைத் தொடங்கும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

ஆனால் இவை எவருடைய நல்லெண்ணத்தினாலும் மனவிருப்பினாலும் ஏற்பட்டு விடாது. மாறாக உங்களினதும், சுதந்திரமான அமைப்புக்களினதும் முயற்சியினாலும் ஒத்துழைப்பினாலேயுமே ஏற்படுத்த முடியும்.

இப்பிரதேசத்திற்குள் உள்ள மதத் தலைவர்கள், கல்விமான்கள், சமூகத் தலைவர்கள் இணைந்து பிரஜைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளை உருவாக்க வேண்டும். இவ்வமைப்புகளானது சாதாரண மக்களுக்கும் இங்குள்ள இராணுவ நிர்வாக அமைப்புக்கிடையே தொடர்பினை ஏற்படுத்தும் பிரஜைகள் அமைப்புகளாக இருத்தல் அவசியம். இதற்கான ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்க இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்கான இயக்கம் (மேர்ஜ்) எந்நேரமும் தயாராக உள்ளது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். இவ்வகையான பணியில் உங்களுக்கு உதவியும், ஆதரவும் வழங்க தென்னிலங்கையில் சுதந்திரமான பல அமைப்புக்கள் உதவ தயாராக இருக்கின்றெனை என்பதை அறியத் தருகிறோம். ஆனால், உங்களுடைய பூரண ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே இவை சாத்தியமாக முடியும்.

சகோதர, சகோதரிகளே, இச் சூழ்நிலையானது உடனடியாக சிவில் நிர்வாகத்திற்கு மாற்றப்பட வேண்டும். இதே நிலைமை தொடருமாயின் அது ஜனநாயக விரோத சக்திகளுக்கு உதவுவது மட்டுமல்லாமல் தொடர்ந்து இப்பிரதேசத்தில் இராணு நிர்வாகம் நிலைத்திருக்கவே உதவிசெய்வதாக இருக்கும். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

மேர்ஜ் இயக்கம் கடந்த 19 வருடங்களாக இந்த நாட்டில் சிறுபான்மை மக்களின் உரிமைக்காகவும் இனங்களுக்கிடையே ஐக்கியத்துக்காகவும் உழைத்து வருகின்றது. இந்நாட்டில் ஜனநாயக அரசியல் சூழ்நிலை உருவாகவும் உழைத்து வருகின்றது. நீங்கள் வாழும் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் உங்களுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளது.

அத்துடன் இந்த யுத்தத்திற்கு நிரந்தர தீர்வினை கொண்டுவரக் கூடிய அரசியல் அதிகார பகிர்வு தொடர்பாகவும் தமிழ் மக்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாகவும், உறுதியாகவும் முன்வைக்க வேண்டிய காலம் இது. காணப்படும் குறைபாடுகள் விவாதிகக்ப்படவேண்டும். அரசியல் அதிகாரங்கள் பகிரப்படுவதால் மட்டுமே இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் காண முடியும். அதற்காக உங்களுடன் இணைந்து மேர்ஜ் இயக்கம் உழைக்கும் என்பதனை உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

‘இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (மேர்ஜ்)’’

*நாளைய சமாதானத்திற்காக இன்றே அதிகாரங்களைப் பகிர்வோம்.*

இல.4, ஜெயரத்ன வழி, கொழும்பு - 05, சாள்ஸ் அபயசேகர அவர்களால் இல. 334, காலி வீதி,
இரத்மலானை , - நவமக, அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. (10 - 05 - 1996)